வேலூர் மாவட்ட கூடுதல் முதன்மை கல்வி அலுவலர் அவர்களின் செயல்முறைகள்
முன்னிலை : திருமதி. எஸ். மணிமொழி. எம்.ஏ. எம்.எட்., எம்.பில்.
ந.க.எண்.1797/DC5/கலை/ஒபக/2023, நாள் 21.11.2023

பொருள்: ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி வேலூர் மாவட்டம் - கல்வி சாரா செயல்பாடுகள் அரசு நிதியுதவி பெறும் நடுநிலை. உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் "கலைத் திருவிழா போட்டிகள் 2023-24" நடத்துதல் வழிகாட்டும் நெறிமுறைகள் வழங்குதல் - சார்பு.

பார்வை:
1. தமிழ்நாடு ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி மாநில திட்ட இயக்குநர். பள்ளிக் கல்வி இயக்குநர் மற்றும் தொடக்கக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள், சென்னை- 600006 ந.க.எண்:3856/ஆ/கலை/ஒபக/2023, நாள் 02.11.2023.
2. தமிழ்நாடு ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி மாநில திட்ட இயக்குநரின் செயல்முறைகள் சென்னை-600006. ந.க.எண்:ACE/228/ஆ3/கலை/ஒபக/2023. நாள்: 14.11.2023
3. இவ்வலுவலக ந.க.எண்.1797/DC5/கலை/ஒபக/2023, நாள் 15.11.2023

-------

மேற்காண் பார்வை 1 மற்றும் 2 கடிதத்தின்படி 2023-2024 அனைத்து அரசு நிதியுதவிப் பெறும் நடுநிலை. உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் பயிலும் 6 முதல் 12 வகுப்பு மாணவர்களுக்கு மாவட்ட அளவிலான கலைத்திருவிழா போட்டிகள் கீழ்கண்ட நாட்களில் நடத்தப்பட வேண்டுமென தெரிவிக்கப் பட்டிருந்தது.

| வ.எண் | நிலை | கால அளவு |
|---|---|---|
| 1 | மாவட்ட அளவில் | 14.11.2023, 15.11.2023, 16.11.2023, 17.11.2023 |
| 2 | மாநில அளவில் | 22.11.2023, 23.11.2023, 24.11.2023, 25.11.2023 |

இந்நிலையில் 15.11.2023 முதல் 20.11.2023 வரை இரண்டாம் பருவ தேர்வுகள் 6 முதல் 12 வகுப்பு மாணவர்களுக்கு நடைப்பெறவுள்ளதால் மாவட்டம் மற்றும் மாநில அளவில் நடைபெறும் கலைத் திருவிழா போட்டிகளை கீழ்குறிப்பிட்டுள்ள நாட்களில் நடத்திட வேண்டுமென் பார்வை 2ல் கண்ட கடிதத்தின்படி தெரிவிக்கப்பட்டுள்ளது.

| வ.எண் | நிலை | கால அளவு |
|---|---|---|
| 1 | மாவட்ட அளவில் | 21.11.2023, 22.11.2023, 23.11.2023, 24.11.2023& 25.11.2023 |
| 2 | மாநில அளவில் | 30.11.2023, 01.12.2023 & 02.12.2023 |

மேலும், மாற்றி அமைக்கப்பட்ட நாட்களின் விவரங்கள் பார்வை 3ன் கடிதத்தின்படி, அனைத்து வகை அரசு நிதியுதவி பெறும் பள்ளித் தலைமையாசிரியர்களுக்கு தெரிவிக்கப்பட்டிருந்தது. எனவே மாவட்ட அளவிலான போட்டிகள் 6 முதல் 12 ஆம் வகுப்பு மாணவர்களுக்கு SEVENTH DAY ADVENTIST MHSS OTTERI பள்ளியில் 23.11.2023 அன்று காலை 09.00 மணிமுதல் நடைபெறும் என அனைத்து வகை அரசு நிதியுதவி பெறும் பள்ளித் தலைமையாசிரியர்களுக்கு தெரிவிக்கப்படுகிறது.

குறிப்பு: பள்ளி அளவில் EMIS பதிவேற்றம் செய்யப்பட்ட மாணவர்கள் மட்டுமே போட்டியில் அனுமதிக்கப்படுவர்.

இணைப்பு :EMIS பதிவேற்றம் செய்யப்பட்ட மாணவர்கள் பெயர் பட்டியல் (21.11.2023)

கூடுதல் முதன்மைக் கல்வி அலுவலர்
ஒருங்கிணைந்த பள்ளி கல்வி
வேலூர் மாவட்டம்.

21/11/2023

21/11/23

பெறுதல்:

1. மாவட்டக் கல்வி அலுவலர் (இடைநிலை). வேலூர் மாவட்டம் (தொடர் நடவடிக்கை மேற்கொள்ளும் பொருட்டு)
2. மாவட்டக் கல்வி அலுவலர் (தனியார் பள்ளிகள்). வேலூர் மாவட்டம் (தொடர் நடவடிக்கை மேற்கொள்ளும் பொருட்டு)
3. மாவட்டக கல்வி அலுவலர் (தொடக்கக்கல்வி), வேலூர் மாவட்டம். (தொடர் நடவடிக்கை மேற்கொள்ளும் பொருட்டு)
4. அனைத்து அரசு நிதியுதவி பெறும் நடுநிலை / உயர்நிலை / மேல்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர்கள். வேலூர் மாவட்டம்
5. அனைத்து வட்டாரக் கல்வி அலுவலர்கள், வேலூர் மாவட்டம் (தொடர் நடவடிக்கை மேற்கொள்ளும் பொருட்டு)
6. அனைத்து வட்டார வளமைய மேற்பார்வையாளர்கள் (பொ), வேலூர் மாவட்டம். (தொடர் நடவடிக்கை மேற்கொள்ளும் பொருட்டு)

நகல்

1. முதன்மைக் கல்வி அலுவலர், வேலூர் மாவட்டம்
அவர்களுக்கு தகவலுக்காக கனிவுடன் அனுப்பலாகிறது.